**செய்தி வெளியீடு எண்: 729** **நாள்: 11.10.2018**

**செய்தி வெளியீடு**

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. எடப்பாடி கே. பழனிசாமி அவர்கள் 10.10.2018 அன்று தலைமைச் செயலகத்தில், தமிழ்நாடு கனிம நிறுவனத்தின் சார்பில் வேலூர் மாவட்டம், திருப்பத்தூர் வட்டம், செவ்வாத்தூர் கிராமத்தில் 1 கோடியே 80 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் நிறுவப்பட்டுள்ள வெர்மிகுலைட்டை விரிவாக்கும், தொழிற்சாலையை திறந்து வைத்தார்கள்.

தமிழ்நாடு கனிம நிறுவனத்தின் சார்பில் வேலூர் மாவட்டம், திருப்பத்தூர் வட்டம், செவ்வாத்தூர் கிராமத்தில் புதிதாக நிறுவப்பட்டுள்ள வெர்மிகுலைட்டை விரிவாக்கும் தொழிற்சாலை, ஆண்டொன்றுக்கு சுமார் 2520 டன்கள் விரிவாக்கப்பட்ட வெர்மிகுலைட் கனிமத்தினை உற்பத்தி செய்து, சுமார் 3 கோடியே 12 லட்சம் ரூபாய் மதிப்பீட்டிலான வெர்மிகுலைட் கனிமத்தினை விற்பனை செய்ய உள்ளது. இத்தொழிற்சாலையில் நவீன தொழில் நுட்பத்துடன் கூடிய இயந்திரங்கள் சுற்றுச்சூழல் மாசுபடாவண்ணம், பாதுகாப்பான முறையில் நிறுவப்பட்டுள்ளன.

இத்தொழிற்சாலையில் உற்பத்தி செய்யப்படும் விரிவாக்கப்பட்ட வெர்மிகுலைட், அரசு வனத்துறை, வேளாண்மைத் துறை மற்றும் தோட்டக்கலை துறைகளில் இயற்கை உரங்கள் தயாரிப்பதற்கும், ஈரப்பதத்தினை தக்கவைப்பதற்காகவும், கட்டுமானத் துறையில் மேற்கூரை வெப்பம் தாங்கியாகவும் பயன்படுத்தப்படும்.

இந்த நிகழ்ச்சியில், மாண்புமிகு வணிகவரித் துறை அமைச்சர் திரு.கே.சி. வீரமணி, மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் டாக்டர் நிலோபர் கபில், தலைமைச் செயலாளர் முனைவர் கிரிஜா வைத்தியநாதன், இ.ஆ.ப., தொழில்துறை கூடுதல் தலைமைச் செயலாளர் திரு.கு. ஞானதேசிகன், இ.ஆ.ப., தமிழ்நாடு கனிம நிறுவன மேலாண் இயக்குநர் திரு.மகேசன் காசிராஜன், இ.ஆ.ப., மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

* * * * *

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**
**நாள்: 11.10.2018**